# ஆசிரியரின் வினையாற்றுகையும் பாடசாலைச் சமூக பங்கேற்பும்

*சந்திரிகா நாகேந்திரன்[a] , ஜெயலஷ்மி இராசநாயகம்[b]
[a]யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. [b]கல்வியியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*chanth.n.28@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய கல்வியின் எதிர்பார்ப்புக்கள் நிறைவு செய்யப்பட்ட மாணவர்களாக பிள்ளைகளைப் பாடசாலையிலிருந்து வெளியேற்றுவதில் முக்கியமாக செல்வாக்குச் செலுத்தும் விடயமாக பாடசாலை சமூக பங்கேற்பு காணப்படுகின்றமை யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். ஆனால் நிலைப்பாட்டில் அவ்வாறான நிலைமை கேள்விக்குரியதாகவே காணப்படுவதனால் வலிகாமம் கல்விவலயத்தை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களின் வகுப்பறைச் செயற்பாட்டின் வினையாற்றலில் பெற்றார், அயற்சமூக பாடசாலைப் பங்கேற்பு என்ற விடயம். ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்டது இந்த ஆய்விற்காக வகுப்பாசிரியர்களின் மாதிரிப்பருமனானது கிரெஜ்ஜி மோர்கனின் அட்டவணையின் பிரகாரமும், மற்றும் பாடசாலை வகை விகிதாசார அடிப்படையிலும் படைகொண்ட எழுமாற்று முறையில் மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன. அத்தோடு கருவியின் நம்பகம், தரவுகளின் நம்பகமானது, Cronbach's Alpha சோதனையைப் பயன்படுத்தி SPSS 16 கணினி மென்பகுபொருள் பயன்படுத்தப்பட்டுத் துணியப்பட்டுள்ளது. வினாக்கொத்துக்களுக்கூடாகப் பெறப்பட்ட தகவல்களானவை சதவீதம் காணல், கைவர்க்கச் சோதனை மூலம் தொடர்புடைமைகள் காணல் மற்றும் Regression பகுப்பாய்வின் மூலமும் தொடர்புடைமைகள் காணப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. வலிகாம கல்வி வலய பாடசாலைகளைப் பொறுத்தவரையில் 75%ற்கு மேற்பட்ட ஆசிரிய பெற்றோர் இடைவினை உறவை 63% ஆன ஆசிரிய ர்கள் கொண்டுள்ளனர். அதேவேளை ஆசிரியர் அயற் சமூக உறவு பலவீனமான நிலையில் காணப்படுகின்றது. 1AB பாடசாலை, பருமன் கூடிய பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சூழலைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியர்களை விட ஒப்பீட்டு ரீதியில் ஆசிரியர் - பெற்றோர் இடைவினை உறவைக் கூடுதலாகக் கொண்டுள்ளனர். பெற்றாரின் பாடசாலைப் பங்கேற்பு திருப்தியான நிலைமை 10.7% ஆகவே காணப்படுகின்றது. ஆசிரியர் - பெற்றார் இடைவினை உறவு தேர்ச்சி நிலைமையில் உள்ள சந்தர்ப்பத்தில் கூட பெற்றோரின் பங்களிப்பின் திருப்திகரமானது : திருப்திகரமற்றது 1 : 6 ஆகவே காணப்படுகின்றது. ஆசிரியர்களின் வகுப்பறைச் செயற்பாட்டின் வினைத்திறனானது திட்டமிடல், அமுலாக்கம் தொடர்பாக அளவிடப்பட்டபோது திட்டமிடலின் திருப்தியான நிலைமை 57.4 வீதமாகும். வகுப்பறைச்செயற்பாட்டின் அமுலாக்கத்தின் திருப்தியான நிலைமை 40.9 வீதமாகும். ஆசிரியர்-அயற்சமூக இடைவினை உறவிற்கும் அயற்சமூகப் பங்களிப்பிற்குமான தொடர்புடைமையின் $\beta$=0.444ஆகவும் காணப்படுகிறது. மேலும் பெற்றாரின் பாடசாலைப் பங்கேற்பிற்கும் ஆசிரியர்களின் வகுப்பறைச் செயற்பாட்டின் திட்டமிடல், அமுலாக்கம் என்பவற்றிற்குமிடையே நேர்க்கணியத்தொடர்பு காணப்படுகிறது. இங்கு முறையே 0.382, 0.625. ஆகும்.

**திறவுச் சொற்கள்** - ஆசிரியரின் வினையாற்றுகை, பாடசாலைச் சமூகம், பாடசாலைப் பங்கேற்பு

## 1. ஆய்வு அறிமுகம் -

சமூகம் தமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதற்காக உருவாக்கிய நிறுவனமே பாடசாலை. நாட்டிலுள்ள பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதைத் தம் பொறுப்பாக ஏற்றுள்ள அரசாங்கம் பாடசாலைகளை அமைத்தல், பராமரித்தல், விரிவுபடுத்தல், பூரணப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. சமூகம் பாடசாலையை உருவாக்கியது முதல் பாடசாலையின் பல்வேறு பணிகளில் ஈடுபடுவதன் காரணமாகப் பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையே மரபு ரீதியான ஒரு தொடர்பு உண்டு. பாடசாலைகளின் பணி பிள்ளைகளின் கல்விச்செயற்பாட்டை திட்டமிட்டு

நடைமுறைப்படுத்துவதனூடாக பிள்ளைகளை கற்ற, பண்புள்ள, எதிர்பார்த்த தேர்ச்சிமட்டங்களை அடைந்த பிரஜைகளாக மாற்றுவதன்மூலம் சமூகத்தின் நிலைப் பாட்டை உறுதிப்படுத்துவதனூடாக சமூகத்தினை முன் னேற்றப் பாதையில் இட்டுச்செல்வதாக அமைய வேண் டும். இன்றைய பாடசாலைகளிடம் முன்னரை விட கூடுதலான அதாவது பாடசாலையால் தனித்து நின்று பூர்த்தி செய்ய முடியாதளவு பொறுப்புக்கள் ஒப்படைக் கப்பட்டுள்ளன. எனவே ஒரு பாடசாலைச் செயற்பாடுகள் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் அமைய பாடசாலைகளில் சமூகப் பங்கேற்பு என்பது இன்றிய மையாததாகும். நாம் இருக்கும் நிலையை சரியாக அறியாது அபிவிருத்திப் பாதையில் பயணத்தை ஆரம் பிக்க முடியாது. இதன் அடிப்படையில் பாடசாலையின் ஒவ்வொரு நிலைமைகளும் எவ்வாறான நிலைமையில் இருக்கின்றது என்பதை இனங்கண்டு பாடசாலையின் அபிவிருத்தியை நோக்கி நகர்த்த வேண்டும். இந்த வகையில் இன்று முன்னிலைப்படுத்தப்படுகின்ற பாட சாலை மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்கு பாடசாலைச் சமூக பங்கேற்பு எந்த வகையில் உதவமுடியும்?. பாடசா லைகள் சமூக பங்கேற்பை அதிகரிக்க யாது செய்ய முடியும்?. பாடசாலை சமூக இடைவினை உறவை எவ் வாறு வலுப்படுத்தலாம்? போன்ற நிலைமைகளைக் கண்டறிந்து பாடசாலை மேம்பாடு நோக்கிய பயணத்தில் பாடசாலை சமூகபங்கேற்பினை வினைத்திறனாக்க வழி சமைப்பதனூடாக பாடசாலைக் கல்வியினை அர்த்தமுள் ளதாக்க முடியும்.

## 2. ஆய்வு வினாக்கள்

- ஆசிரியர்-பெற்றோர் இடைவினை உறவு எவ்வாறான நிலையில் காணப்படுகிறது?
- ஆசிரியர்- அயற்சமூக இடைவினை உறவு எவ்வா றான நிலையில் காணப்படுகிறது?
- பெற்றோரின் பாடசாலைக்கான பங்களிப்பு எவ்வாறு உள்ளது?
- அயற்சமூகத்தின் பாடசாலைக்கான பங்களிப்பு எவ் வாறுள்ளது?
- பெற்றார், அயற்சமூக பாடசாலைப் பங்களிப்பிற்கும் வகுப்பறைச் செயற்பாட்டின் வினைத்திறனிற்குமான தொடர்புடமை எத்தகையது?

## 3. ஆய்வின் குறிக்கோள்கள்

- ஆசிரியர்களின் வகுப்பறைச் செயற்பாடுகளின் வினைத் திறனைக் கண்டறிதல்.
- ஆசிரியர்-பெற்றார், ஆசிரியர்- அயற்சமூக இடை வினை உறவின் நிலைமைகளை கண்டறிதல்
- பெற்றோர்,அயற் சமூகத்தினரின் பாடசாலை பங்கேற் பினை கண்டறிதல்
- ஆசிரியர்களின் செயற்பாட்டிற்கும் பாடசாலை-சமூக பங்கேற்பிற்குமான (பெற்றோர், அயற்சமுகம்) தொடர் புடமைகளை ஆராய்தல்.

## 4. ஆய்வின் வரையறைகள்

- இடைநிலை பாடசாலைகள் மட்டும் கருத்திற் கொள் ளப்பட்டன.
- வகுப்பாசிரியர்கள் மட்டும் கருத்திற் கொள்ளப்பட்டனர்.
- வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் திட்ட மிடல், நடைமுறைப்படுத்தப்படல் ஆகியன மட்டுமே இங்கு கருத்திற் கொள்ளப்பட்டன.
- பெற்றோர், அயற் சமூகம் ஆகியன மட்டுமே இங்கு கருத்திற் கொள்ளப்பட்டன.

## 5. இலக்கியமீளாய்வு

முக்கிய சொற்பதங்களை (Keywords) விளங்கிக் கொள்வதற்கும் மாறிகளைக் கருத்தில் கொள்ளுமுக மாகவும் எடுக்கப்பட்ட இலக்கியங்களில் ஒரு சில இங்கு தரப்படுகின்றன. குலரத்னாவினால் பாடசாலைச் சமுதாயம் என்பது "குறித்த பாடசாலையில் கல்வி பயிலுகின்ற பிள்ளைகளின் பெற்றோர்களே அப்பாடசாலையின் சமுதாயம் என முன்னர் கருதப்பட்டது. எனினும் தற்போது பாடசாலைச் சமுதாயம் என்பதற்கு அப் பாடசாலையின் பயனாளிகள் என்ற பதமே பயன்படுத்தப்படுகின்றது"[1]. இந்த வகையில் இலங்கைப்பாடசாலைகளில் பாடசா லைச்சமுதாயத்தில் பின்வரும் அங்கத்தவர்கள் உளர். ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாண வர்கள், அயற்சமூகம், பழையமாணவர்கள், சமயஸ்தாப னங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை, சமுதாயத் தலைவர்கள். ஆசிரியர் வினையாற்றலில் சிறந்த ஆசிரியர் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் என்ற வகையில் Wragg இனால்

மிகவும் அவதானமாகப் பாடத்தைத் தயார்செய்தல், பாடத்தின் தொடக்கம், முடிவு ஆகியன தொடர்பான ஒழுங் கமைப்புக்களை விருத்திசெய்தல் ஆகியன முன்வைக் கப்பட்டுள்ளன [2]. Hopkins மற்றும் Stervn ஆகியோர் தாம் மேற்கொண்ட ஆய்வில் உயர்தரமிக்க ஆசிரியர்களின் இயல்புகளாக இனங்கண்டதில் ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து செயற்படும் ஆற்றல் மீள்பிரதிபலிப்புக்கான இயலுமை ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார் [3]. ஏனை யவர்களுடனான ஈடுபாடு மதிப்பிடல், புரிந்து கொள் ளல், பிறருடைய சிந்தனைக்கு வெளிக்காட்டல் மற்றும் மற்ற வர்களுடன் அறிவு, கருத்துக்களை பகிர்ந்து கொள் ளல் என்பவற்றை சமூககட்டுரு வாக்குவாதம் வலியு றுத்துகின்றது [4]. மாணவர்கள் மற்றவர்களுடனான சமூக இடைத் தொடர்புகளினூடாக அறிவைக் கட்டியெழுப்பு கின்றனர் என்பதனையே இது குறிக்கின்றது. பெற்றோர் பங்களிப்புத் தொடர்பாகப் பார்க்கின்றபோது கல்வித்தர மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்வதிலே பெற்றோருக்கு சிறப்பார்ந்த பங்கு உண்டு என்று 1979 ஆம் ஆண்டிலே வெளியிடப்பட்ட பெற்றோர் தொடர்பான சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது [5]. பெற்றோர் பற்றிய நோக்கில், அவர்கள் கல்வி பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களில் தெளிவின்மையால், பாடசாலைச் செயற்பாடுகள் அமைய வேண்டிய விதம் பற்றிய சில முரண்பாடான நிலைப் பாடுகளும் தோன்றுகின்றன [6]. பொறுப்பற்ற சில பாட சாலை மட்ட நடத்தைகள் சிலவற்றினால் பெற்றோர் பாடசாலை அழைப்புக்களைப் புறக்கணித்து நடந்து கொள்ள அதிக வாய்ப்புண்டு. இதனை அதிபர்களும் ஆசிரி யர்களும் விளங்கிக் கொண்டு நிதானமானதும் சமரச மானதுமான அணுகுமுறையைப் பின்பற்றிப் பெற்றோ ருக்குச் சமமான முக்கியத்துவம் வழங்க வேண்டும் [7].

## 6. ஆய்வுமுறையியல்

வலிகாம வலய கல்வி வலயத்தில் தரம் 6-11 வரை யான வகுப்பாசிரியர்கள் 646 பேர்களில் கிரெஜ்ஜி மோர் கனின் அட்டவணையின் பிரகாரம் மாதிரியின் பருமன் 242 ஆகக்கொண்டு படை கொண்ட எழுமாற்று மாதிரி எடுப்புமுறையில் (Stratified random sampling) பாடசாலை வகைகளுக்கிடையிலான விகிதாசாரப்படி (1AB;1C;Typ–2;Typ–3) 1AB=09: 1C=09; Typ – 2=18; Typ – 3= 07 ஆக 43 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. முன்னோடி வினாக்கொத்து, வினாக் கொத்து அரை அமைப்பாக்கம் செய்யப்பட்ட நேர்காணல் ஆகிய முதல்நிலை மூலங்களுக் கூடாகவும் நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், Journals, ஏற்கனவே மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஆகிய துணை நிலை மூலங்க ளுக்கூடாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. Cronbach's Alpha சோதனையைப் பயன்படுத்தி கருவி, தரவுகளின் நம்பகம் துணியப்பட்டது. இவை முறையே 0.866, 0.941ஆகும். நூற்றுவீதம் கைவர்க்கச் சோதனை, இணைபுக்குணகம் Regression test என்பவற்றைப் பயன் படுத்தி தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 7. ஆய்வு முடிவுகளும் கலந்துரையாடலும்

**அட்டவணை 1** - வினாக்களுக்கு லிக்கேட் அளவுத் திட்டத்தினைப் பயன்படுத்திக் கணித்த பெறுபேறுகளின் அடிப்படையில் 75%ற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் நிலைமை திருப்தியான நிலைமையாகக் கருதப்பட்டு பெறப்பட்ட பெறுபேறுகள் பின்வருமாறு

| நிலைமை | திருப்தியான நிலைமை | | திருப்தியற்ற நிலை | |
|---|---|---|---|---|
| | N | N% | N | N% |
| ஆசிரியர்-பெற்றோர் இடை வினை உறவு | 153 | 63.2 | 89 | 36.8 |
| ஆசிரியர் - அயற்சமூக இடை வினை உறவு | 107 | 44.2 | 135 | 55.8 |
| பெற்றோரின் பாடசாலை பங்கேற்பு | 26 | 10.7 | 216 | 89.3 |
| அயற்சமூக பங்களிப்பு | 25 | 10.3 | 217 | 89.7 |
| ஆசிரியர் வினையாற்றுகை | | | | |
| (அ) திட்டமிடல் | 139 | 57.4 | 103 | 42.6 |
| (ஆ)வகுப்பறை செயற்பாட்டு அமுலாக்கம் | 99 | 40.9 | 143 | 59.1 |

இவற்றின் அடிப்படையில் ஆசிரியர்-பெற்றோர் ஆசிரியர்-அயற்சமூக உறவு ஓரளவு காணப்படுகின்ற போதிலும் அச்சமூகத்தினரின் பாடசாலை பங்கேற்பு மிக மிக நலி வானதாகவே காணப்படுகின்றது. ஆசிரியர்களின் வினை யாற்றுகையில் திட்டமிடல் சராசரியான நிலைமையில் காணப்படுகின்ற போதிலும் வகுப்பறைச் செயற்பாட்டு அமு லாக்கம் அதிலும் குறைவான நிலையிலேயே காணப் படுகின்றது.

**அட்டவணை 2**- ஆசிரியர்-பெற்றோர் இடைவினை உறவை திருப்தியான நிலையில் கொண்டுள்ள பாடசா லைகளில் இவ்உறவானது 1AB > 1C >Type 2 >Type 3 என காணப்படுகின்றது. மேலும் Type 3 பாடசாலைகளில் இந்நிலைமை சராசரியிலும் குறைவாக காணப்படுகின்றது. இத்தொடர்புகள் பின்வருமாறு காட்டப்படுகிறது.

| நிலைமை | P value | முடிவு |
|---|---|---|
| ஆசிரியர் பெற்றோர் இடைவினை உறவுக்கும் பாடசாலை வகைக்குமான தொடர்பு | 0.000 | தொடர்பு உண்டு |
| ஆசிரியர் பெற்றோர் இடைவினை உறவு பால் நிலைக்குமான தொடர்பு | 0.433 | தொடர்பு இல்லை |
| ஆசிரியர் பெற்றோர் இடைவினை உறவுக்கும் வசிப்பிடத் தூரத்திற்குமான தொடர்பு | 0.043 | தொடர்பு உண்டு |
| பாடசாலை வகைக்கும் பெற்றோரின் பங்களிப்பிற்கும் | 0.000 | தொடர்பு உண்டு |
| பாடசாலை பருமனுக்கும் பெற்றோரின் பங்களிப்பிற்கும் | 0.015 | தொடர்பு உண்டு |
| பெற்றோர் கூட்டங்களில் கற்றலுக்கான நாளாந்த உபகரணங்களை மாணவர் வைத்திருப்பதை உறுதிப்படுத்தி அனுப்புவது தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் பெற்றோர் அவ்வாறு செய்தலும் | 0.001 | தொடர்பு உண்டு |
| கல்விக்கொள்கைகள் கற்றல்-கற்பித்தல் முறைகள் பற்றி பெற்றாருக்கு எடுத்துக் கூறலுக்கும் பெற்றார் தாமாக வந்து தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடு தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் | 0.001 | தொடர்பு உண்டு |
| மாணவர்களது ஒழுக்கப் பிரச்சினைகள் தொடர்பாக பெற்றோருடன் ஆசிரியர்கள் கலந்துரையாடுவதற்கும் பாடசாலைக்கு புறம்பாக பிள்ளைகளது நடத்தைகள் பற்றி பெற்றோர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் | 0430. | தொடர்பு உண்டு |

ஆசிரியர் பால்நிலைக்கும், ஆசிரியர்-பெற்றோர் இடைவினை உறவுக்கும் தொடர்பு காணப்படவில்லை. மற்றும் 6Km தூரத்தினை எல்லையாகக் கொண்டு ஆசிரியர்-பெற்றோர் இடைவினை உறவை அளந்தபோது பாடசாலைக்கு கிட்ட உள்ள ஆசிரியர்கள் கூடுதலான இடைவினை உறவை கொண்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. ஆயினும் இது ஒரு நலிவான தொடர்புடைமையையே காண்பிக்கின்றது.

பெற்றோரின் பாடசாலைப் பங்கேற்பின் தொடர்பை பரிசீலிக்கும்போது 1AB>1C>Ty2 ஆகக்காணப்படுகின்றது. Ty3 பாடசாலைகளில் பெற்றோரின் பங்களிப்பு திருப்தியான நிலைமையில் எந்த பாடசாலையும் இல்லை. பாடசாலை பருமன் கூடக்கூட பெற்றோரின் பங்களிப்பும் அதிகரித்துச் செல்வதனைக் காணமுடிகின்றது. ஆசிரியர்-பெற்றோர் இடைவினை உறவிற்கும் பெற்றோரின் பங்களிப்பிற்குமான தொடர்புடமையில் பெற்றோர் கூட்டங்களில் கற்றலுக்கான நாளாந்த உபகரணங்களை மாணவர் வைத்திருப்பதை உறுதிப்படுத்தி பிள்ளைகளை அனுப்புவது தொடர்பாக பெற்றோர் கூட்டங்களில் கலந்துரையாடப்படுவதற்கும் பெற்றார் அவ்வாறு பிள்ளைகளை அனுப்புவதற்குமிடையே தொடர்பு காணப்பட்ட போதிலும் குறைவான நேர்க்கணிய செல்வாக்கினையே தருகின்றது. கூட்டங்களில் கல்விக்கொள்கைகள் கற்றல்-கற்பித்தல் முறைகள் பற்றி பெற்றோருக்கு எடுத்துக்கூறலுக்கும். பெற்றோர் தாமாக வந்து தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடு தொடர்பாக ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதற்குமிடையே தொடர்பு காணப்பட்ட போதிலும் ஆசிரியர்களின் இச்செயற்பாடு பெற்றோரின் இத்தகைய பணியினை அதிகரிக்கச் செய்வதனை ஆய்வு முடிவு தரவில்லை.

மாணவர்களது ஒழுக்கப்பிரச்சினைகள் தொடர்பாக பெற்றோருடன் ஆசிரியர்கள் கலந்துரையாடுவதற்கும் பெற்றோர் தமது பிள்ளைகளின் பாடசாலைக்கு வெளியிலான நடத்தைகள் பற்றி ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதற்குமிடையே ஒரு நலிவான தொடர்புடைமையே காணப்படுவதோடு ஆசிரியர்களது இச் செயற்பாடு பெற்றோரது இத்தகைய பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும் அமையவில்லை. பெற்றோர் கூட்டங்களுக்கான அறிவித்தலில் நோக்கமும் தெரிவிக்கப்படல் ($X_1$) கூட்டங்கள் நேரகாலத்திற்கு தொடங்கி நேரகாலத்திற்கு முடிவடைதல் ($X_2$) ஆகியன கூட்டங்களுக்கான பெற்றோரின் வருகையில் ஒரு பாரிய நேர்கணிய செல்வாக்கை செலுத்தவில்லை. கூட்டங்கள் நெகிழ்ச்சியான நேரங்களாக ஒழுங்கமைக்கப்படல் ($X_3$) கூட்டங்களுக்கான பெற்றோரின் வருகையில் சிறியளவிலான எதிர்கணிய செல்வாக்கினையே காட்டுகின்றது. இதற்கான Multiple regression சமன்பாடு $Y=\alpha+\beta_1X_1+\beta_2X_2+\beta_3X_3$ $Y=1.065+0.214X_1+0.288X_2+(-0.194)X_3$ ஆக காணப்படுகிறது. வகுப்பறை செயற்பாட்டு வினைத்திறனில், மீத்திறன் ($y_1$),மெல்லக்கற்போருக்கான ($y_2$) செயற்பாடுகள் நாளாந்தம் திட்டமிடப்படல் தினமும் வகுப்பறைச் செயற்பாடு தொடர்பாக மீள்நோக்கிப்பார்த்தல் ($y_3$) ஆகிய ஆசிரியர்களது செயற்பாட்டில் பெற்றார் கூட்டங்களில் பெற்றாரினால் ஆலோசனைகள் முன்வைக்கப்படல் ($X_1$), அவ்வாலோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் அவர்களின் பங்களிப்பு ($X_2$)ஆகிய வற்றின் செல்வாக்கில், ஆலோசனைகளை நடைமுறைப் படுத்துவதிலுள்ள பங்களிப்பே கூடிய நேர்கணிய செல்வாக்கினைச் செலுத்துகின்றது.

இவற்றின் Regression சமன்பாடு பின்வருமாறு

$$Y_1=1.655+0.106X_1+0.214X_2$$

$$Y_2=1.584+0.069X_1+0.251X_2$$

$$Y_3=1.758+0.096X_1+0.242X_2$$

ஆசிரியர்-பெற்றோர் இடைவினை உறவிற்கும் பெற்றோரின் பங்களிப்பிற்குமான தொடர்புடைமையில் தொடர்பு காணப்பட்ட போதிலும் இடைவினை உறவு திருப்தியான நிலையில்கூட பெற்றோரின் பங்களிப்பு திருப்திகரமானது: திருப்திகரமற்றது அண்ணளவாக 1: 6 ஆகவே காணப்படுகிறது.

பெற்றோரின் பங்களிப்பிற்கும் ஆசிரியர்களின் வினையாற்றுகைகளுக்குமான தொடர்புடமையை சோதித்தபோது பெறப்பட்ட Regression curve estimation பின்வருமாறு.







**வரைபு 1** **வரைபு 2**

x அச்சு-வகுப்பறைச்செயற்பாடு அமுலாக்கம் x அச்சு-- திட்டமிடல்

y அச்சு-பெற்றோரின் பாடசாலை பங்கேற்பு y அச்சு- -பெற்றோரின் பாடசாலை பங்கேற்பு

$Y= \alpha+\beta_1 X_1 = 36.28+0.625X$ $Y= \alpha+\beta_1 X_1 =57.420+0.382X$

அயற் சமூக உறவிற்கும் அயற் சமூக பாடசாலைப்பங்கேற்பிற்கும், ஆசிரியர்களின் வினையாற்றுகை களுக்குமான தொடர்புடமையை சோதித்தபோது பெறப்பட்ட Regression curve estimation பின்வருமாறு.










**வரைபு 3** **வரைபு 4** **வரைபு 5**

x அச்சு- அயற்சமூக உறவு y அச்சு--வகுப்பறைச்செயற்பாடு அமுலாக்கம் y அச்சு- திட்டமிடல்

y அச்சு- அயற்சமூக பங்களிப்பு x அச்சு- அயற்சமூக பாடசாலை பங்கேற்பு x அச்சு- அயற்சமூக பாடசாலை பங்கேற்பு

இங்கு $Y= \alpha+\beta_1 X_1 = 23.280+ 0.444X$ $Y= \alpha+\beta_1 X_1 =45.343+0.474X$ $Y= \alpha+\beta_1 X_1 =57.211+0.391X$

அயற்சமூக பாடசாலை பங்கேற்பின் திருப்தியான நிலைமை 10.3% ஆகும். இது மிகவும் நலிவானதொரு அம்சமாகும். அதேவேளை ஆசிரியர்களின் திட்டமிடல், வகுப்பறைச் செயற்பாட்டு அமுலாக்கங்கள் ஆகியவற்றின் திருப்தியான நிலைமை 57.4%, 40.9% ஆகக் காணப் படுகின்றது. ஆனால் அயற்சமூக பாடசாலை பங்கேற் பிற்கும் ஆசிரியர்களின் வினையாற்றுகைகளான திட்ட மிடல், வகுப்பறைச் செயற்பாட்டு அமுலாக்கங்கள் ஆகிய வற்றிற்கிடையிலான தொடர்புடைமையின் குணகம் முறையே 0.391, 0.474 ஆகக் காணப்படுவதனால் அயற்சமூக பாடசாலை பங்கேற்பை அதிகரிக்கச் செய்வதன் மூலம் ஆசிரியர்களின் வினையாற்றுகையை மேம் படுத்தலாம் என முடிவு கூறலாம். இதேவேளை ஆசிரியர்-அயற்சமூக உறவின் திருப்தியான நிலைமை 44.2% ஆக காணப்படுகின்றபோதிலும் ஆசிரியர்- அயற்சமூக உறவிற்கும் அயற் சமூக பாடசாலைப் பங்களிப்பிற்கு மான தொடர்புடைமையின் குணகம் = 0.44 ஆகக் காணப்படுகின்றது. எனவே அயற்சமூக உறவை வலுப் படுத்துவதனூடாக அயற் சமூக பங்களிப்பை மேம்படுத்த வேண்டிய கடப்பாடு காலத்தின் தேவையாக உள்ளது. இதன் மூலம் ஆசிரியர்களின் வினையாற்றுகையை மேம் படுத்த முடியும்.

**8. முடிவுரை**

ஆசிரியர்-பெற்றோர், ஆசிரியர்-அயற்சமூக உறவுகளில் பலவீனமான நிலை காணப்படாத போதிலும் இவர்களின் பாடசாலைப் பங்கேற்பு மிகப்பலவீனமாகவே காணப்படுகின்றது. ஆசிரியர்களின் வினையாற்றுகையும் அண்ணளவாக சராசரியான ஒரு நிலைப்பாட்டிலேயே உள்ளது. ஆசிரியர்-பெற்றோர், ஆசிரியர்-அயற்சமூக உறவுகளைப் பலப்படுத்துவதன் மூலம் இவர்களின் பாடசாலைப் பங்கேற்பை அதிகரிக்கச் செய்யமுடியும். இதன் மூலம் ஆசிரியர்களின் வினையாற்றுகையை மேம்படுத்தலாம். அதிலும் பெற்றோரின் பங்கேற்பிற்கூடாக அதிகளவில் வகுப்பறைச் செயற்பாட்டை அர்த்தமுள்ளதாக்கி பாடசாலை மேம்பாட்டை நோக்கி நகர்த்த முடியும்.

**9. விதப்புரை**

வகுப்பறைச்செயற்பாட்டு அமுலாக்கம் தொடர்பான உள்ளக மேற்பார்வை, வழிகாட்டல்கள் பாடசாலை மட்டத்தில் வினைத்திறனாக மேற்கொள்ளப்படவேண்டும். பெற்றோருடனான தரவட்டங்கள் ஆசிரியர்களிடம் பெற்றோர் தொடர்பான நேர்மனப்பாங்குகள் விருத்தி செய்யப் படவேண்டும். பாடசாலை நிகழ்வுகளில் பெற்றார், அயற் சமூகம் பங்காளிகளாக்கப்படவேண்டும். அயற் சமூகத் தினருடனான சந்திப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

சமூகத்திலுள்ள வளவாளர்களை பாடசாலை பயன் படுத்துதல் வேண்டும்.

எதிர்காலத்தில் ஆரம்ப பாடசாலைகளிலும் பாடசாலை சமூக பங்கேற்பும் பாடசாலை மேம்பாடும் எவ்வாறான நிலையில் இருக்கின்றது என்பது அறியப்பட வேண்டும் பெற்றாரின் பாடசாலை பங்கேற்பில் மனப்பாங்குரீதியான விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


[1] குலரத்னா, W.G."பாடசாலை மேம்பாட்டு பங்குதாரருக்கான கைந்நூல். இடைநிலைக் கல்வி நவீனமயமாக்கல் செயல்திட்டம் - II". பத்திரமுல்ல : கல்வி அமைச்சு.ப.70,2008

[2] Wragg, E.C. “Class Management in the primary school”. London: Routledge falmer.P.55-59, 2001.

[3] Hopkins,D. “School Improvement for real”. London New York: Routledge falmer.P.120,2001

[4] Santrock, J. W. “Educational psychology” (3rd ed.) New York: The Mc Graw-h;ill Com panies.P.314-315. 2006.

[5] இராசநாயகம், ஜெ."கல்வியின் சமூகவியல்". யாழ்ப்பாணம் :JR திறன் வெளியீடு,2008

[6] கருணாநிதி, ம. “கல்விச் சமூகவியல்” கொழும்பு - சென்னை:குமரன் புத்தக இல்லம்.ப.83-84. 2008.

[7] சின்னத்தம்பி, மா."பாடசாலை ஆசிரியர்கள் ஊக்கத் திறன் குறைந்தவர்களா"? ப.இராஜேஸ்வரன் (Ed). பாடசாலையும் ஆசிரியரும் ஓர் ஊடகப் பார்வை. யாழ்ப்பாணம்: தினக்குரல் பத்திரிகை. ப.101-105, 2009.